


கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் சிறுமலர் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் துவக்கி வைத்து பார்வையிட்டார், அப்போது ஒன்றிய குழு துணை தலைவர், ஒன்றிய கழக செயலாளர் அ.வெ. அன்புமணி மாறன், பேரூர் கழக செயலாளர் செந்தில்குமார், பேரூராட்சி மன்ற தலைவர் லாவண்யா கணேஷ், கவுன்சிலர் நாகராஜன் மற்றும் சுகாதாரத்துறை தேர்தல் அதிகாரிகள், அலுவலர்கள், மருத்துவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள மாநிலக் கல்விக் கொள்கையை மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் வகையில் எங்கள் கல்வி எங்கள் உரிமை என்ற தலைப்பில் திமுக மாணவர் அணி சார்பில் உரையாடல் நிகழ்ச்சி ஒன்று இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர், மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல்ஹாசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். முன்னதாக நிகழ்வின் நோக்கவுரையைத் திமுக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி நிகழ்த்தினார். காம்ரேட் டாக்கீஸ் சார்பில் கல்வியின் முக்கியத்துவம் குறித்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. திமுக மாணவர் அணி மாநிலத் துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் வரவேற்புரை நிகழ்த்தினார். திமுக மாணவர் அணி தெற்கு மாவட்ட அமைப்பாளர் பா.அருண்குமார் நன்றியுரை ஆற்றினார். மேலும், திமுக மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### கடலூர் மாவட்டம், குடிகாடு கிராமத்தில் தனியார் தொழிற்சாலையில் மதில் சுவர் சாய்ந்து

# உயிரிழந்த இருவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.25-

கடலூர் மாவட்டம், குடிகாடு கிராமத்திலுள்ள தனியார் தொழிற்சாலையில் மதில்சுவர் சாய்ந்த சம்பவத்தில் உயிரிழந்த இருவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், குடிகாடு கிராமத்தில் இயங்கி வரும் தனியார் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் (23.8.2025) மாலை 6 மணியளவில் மதில்சுவர் சாய்ந்ததில் சம்பவ இடத்தில் பணிபுரிந்துவந்த பூதங்கட்டி கம்பளிமேடு பகுதியைச் சேர்ந்த திருமதி. இளமதி (வயது 35) க/பெ.அன்பு மற்றும் திருமதி. இந்திரா (வயது 32) க/பெ. தேவர் ஆகிய இரண்டு பெண்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் டி.கார்த்திகேயன் மாமனாரும், கடலூர் கிழக்கு மாவட்டம், ஒருங்கிணைந்த முன்னாள் கீரப்பாளையம் ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான பா.பூபாலன் அவர்களின் மறைவையொட்டி, அவரது உடலுக்கு, கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடன் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

### திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.7.75 கோடியில் 2 மருத்துவக் கட்டடங்கள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்

நெல்லை.ஆக.25-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் பகுதியில் நகர்புற துணை சுகாதார மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூபாய் 1.95 கோடி மதிப்பீட்டில் 6 மருத்துவ கட்டிடங்களையும்,திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூபாய் 7.75 கோடி மதிப்பில் 2 மருத்துவ கட்டிடங்களையும்,பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்த்திய அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் ரூபாய் 1.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட மருந்து செய் நிலையத்தினையும் ஆக மொத்தம் ரூபாய் 11.30 கோடி மதிப்பிலான மருத்துவ கட்டிடங்களை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் மரு.செந்தில்குமார்,மாவட்ட ஆட்சியர் மரு. இரா.குமார்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,மாநகராட்சி ஆணையாளர் மரு. மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து வைத்தனர்.

அதன்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த் துரை சார்பில் கே.டி.சி.நகர் பகுதியில் நகர்புற துணை சுகாதார மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கே.டி.சி.நகர்,மங்கம்மாள் சாலை பகுதியில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் கட்டிடத்தினையும்,பாட்டபத்து கிராமத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகா நிலையத்தில் ரூபாய் 45 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள கூடுதல் கட்டிடத்தினையும் ஆர்.எஸ்.எ. நகரில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையத்துனையும், பாட்டப்பத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள நகர்ப்புற துணை சுகாதார நிலையத்திலையும், பாளையங்கோட்டை மேலப்பாளையத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத்தினையும்,பெருமாள்புரத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள நகர்ப்புற துணை சுகாதார நிலையமும், என மொத்தம் ரூபாய் 1.95 கோடி மதிப்பில் கட்டடப்பட்டுள்ள 6 மருத்துவ சேவை கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 5 கோடி மதிப்பில் கட்டடப்பட்டுள்ள நவீன முழு உடல் பரிசோதனை மையத்தினையும்,ரூபாய் 2.75 கோடி மதிப்பில் கட்டடப்பட்டுள்ள நவீன கண் மருத்துவமனை மருத்துவப் பிரிவு கட்டிடம் என மொத்தம் ரூபாய் 7.75 கோடி மதிப்பிலான மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்டுள்ள மையத்தில் உடல் பரிசோதனை முழுவதும் மேற்கொள்ள ரூபாய் 1000,ம் ரூபாய் 2000 ம் ரூபாய் 3000 ம் மற்றும் ரூபாய் 4000 என நான்கு பிரிவுகளில் குறைந்த கட்டணத்தில் உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

மேலும் பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவ கல்லூரியில் 1.6 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்ட மருந்து செய் நிலையத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் அரசு சித்த மருத்துவக் கல்லூரி சார்பில் நடைபெற்ற வைர விழாவில் கலந்துகொண்டு வைர விழா மலரினை வெளியிட்டுசிறப்புரையாற்றி னர்கள்.

அதன் பின்னர் அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்' சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது . தமிழகத்தில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களில் தலா மூன்று முகாம்கள் என்ற விகிதத்தில் நடத்தப்பட்டு வருகிறது.10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநகராட்சி யில் தலா 4 இடங்களிலும்,பத்து லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகளில் தலா மூன்று இடங்களிலும் சென்னை பெரும் மாநகராட்சியில் 15 இடங்களிலும் இந்த திட்டம் மூலம் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.இந்த திட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்து இன்றைய நாள் வரை 1256 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. கடந்த 2ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த முகாமில் 17 வகையான மருத்துவ சிகிச்சைகள் இடம் பெற்றுள்ளன.38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட முதல் முகாமில் 45000 க்கும் மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளனர். கடந்த 9 ம் தேதி ஊட்டி மற்றும் சென்னை ஆகியவை நீங்களாக 36 மாவட்டங்களில் நடத்தப்பட்ட முகாமில் 48,418 பேர் பயன் பெற்றுள்ளனர். இன்றைய தினம் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட முகாமில் 56 ஆயிரத்து 745 பேர் பயன்பெற்றுள்ளனர். இதுவரை நடத்தப்பட்ட முகாம்கள் மூலம் 1,39,488 பேர் பயன்பெற்றுள்ளனர். 1964 ம் ஆண்டு தொடங்கப்பட்ட திருநெல்வேலி பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவர் கல்லூரி 60 ஆண்டுகள் நிறைவு செய்து வைர விழா கண்டுள்ளது. இந்த கல்லூரி விரிவாக்கத்திற்காக 25 ஏக்கர் நிலம் கல்லூரியின் மூலம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்றி தரும் வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு துறை சார்ந்த உபரி நிலங்களில் ஏதாவது ஒரு இடத்தை தேர்வு செய்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் முதலமைச்சர் அவர்களின் மூலம் விரைவில் எடுக்கப்படும்.

உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் இந்திய அளவில் முதல் இடத்தில் இருந்து வருகிறது.உடல் உறுப்பு தானம் செய்தவர்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு பின்னர் இதுவரை 494 பேர் உடல் உறுப்பு தானம் செய்துள்ளனர்.விரைவில் உலக அளவில் தமிழகம் உடல் உறுப்பு தானம் செய்வதில் முதல் இடம் பெறும்.நிதி நிலை அறிக்கையில் உடல் உறுப்பு தானம் செய்போரின் பெயர்களை கௌரவிக்கும் வகையில் மரியாதைக்குரிய பெருஞ்சுவர் என்ற திட்டம் அறிவிக்கப்பட்ட நிலையில் அதற்கான பணிகள் நடந்து வருகிறது தமிழகத்தில் உள்ள 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இந்த பெருஞ்சுவர் எழுப்பப்பட்டு அங்கு உடல் தானம் செய்பவர்களின் பெயர்கள் பொறிக்கப்படும்.இந்த திட்டம் ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும்.

தமிழகத்தில் முதல் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என 2022 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு ஆளுநருக்கு சட்டம் முன் வடிவு அனுப்பப்பட்டது.இதுவரை பல்வேறு காரணங்களை குறிப்பிட்டு 4 முறை திருப்பி அனுப்பி உள்ளார்.கடந்த 21 ஆம் தேதி 4 திருத்தங்களை குறிப்பிட்டு மீண்டும் ஆளுநர் சித்த பல்கலை கழகத்திற்கான முன்முடிவை திருப்பி அனுப்பியுள்ள நிலையில் சட்ட வல்லுனர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு நான்கு திருத்தங் களையும் விரைவில் சரி செய்து வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டு பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளபடும். கிராம சுகாதார செவிலியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.ஆனால் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்க ப்பட்டு வருகிறது.உச்ச நீதிமன்றத்தில் இது தொடர்பாக 30க்கும் மேற்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. முன்னணி வழக்கறிஞர்களைக் கொண்டு இந்த வழக்குகள் வாதாடப்பட்டு தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.இன்னும் சில தினங்களில் அதற்கான தீர்ப்பு வந்தவுடன் மேற்பட்ட கிராம சுகாதார செவிலியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மைதீன் கான், மாநில திட்டக் குழு உறுப்பினர் சிவராமன்,நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் ரேவதிபாலன், அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் கோமளவள்ளி, துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் மருத்துவர் லதா,மாவட்ட சுகாதார அலுவலர் வேல்முருகன் கணேஷ்,நகர் அலுவலர் மருத்துவர் ராணி மற்றும் அரசு அலுவலர்கள்,மருத்துவர்கள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.சி.இளங்கோவன் (எ) ஏழுமலை
### ஆகஸ்ட் 25 (2016)



ஒருங்கிணைந்த செங்கை–அண்ணா மாவட்டத்தில் உள்ள வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

இவர், அரசுப் பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிக் கொண்டிந்தபோது, துறையின் பல்வேறு நடவடிக்கைகளையும் மீறி கழகம் அறிவித்த ஆர்ப்பாட்டம், போராட்டங்களில் பங்கு கொண்டார்.

இவர் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, சைக்கிளிலேயே பயணம் செய்து கழகத்தை வளர்த்துடன், இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை. கலியமூர்த்தி
### ஆகஸ்ட் 25 (1989)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக மூன்று முறையும், சிதம்பரம் நகரச் செயலாளராக இரண்டு முறையும் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு, மொழிப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை மறியல் போன்ற போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1977ல் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் – 1986ல் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.